# தமிழ்வழி

கற்றலுக்கான ஒளி

## தரம் 07



# தமிழ் மொழியும் இலக்கியமும்

## வினாத் தொகுப்பு

## முதலாம் தவணை

தவணைக்குரிய பாட அலகுகளுக்கான வினாக்களும்,
பயிற்சி வினாக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.





ஓயாத முயற்சியே
வெற்றியின் படிக்கல்


ஆசிரியர்:



ஏ.கஜன் B.A Tamil

077 2400 707
076 8044 959

# இதழ்களாய்....

## முதலாம் தவணைக்குரிய பாட அலகுகள்


- இதழ்களாய் 2
- அந்தரே கதைகள் 3 - 5
- ஆறு (செய்யுள்) 6 - 9
- கடமை (கட்டுரை) 10 - 14
- காட்டு விலங்குகளைக் காப்போம் (கட்டுரை) 15 - 19
- யாம் ஐவேம் (செய்யுள்) 20 - 21
- காந்தியடிகள் கடிதம் 22 - 24
- தமிழ்த் தட்டச்சின் தந்தை (கட்டுரை) 25




# அந்தரே கதைகள்

பாடம்: 1

## பயிற்சி வினாக்கள்

1. இப் பாடப் பகுதியின் கதைநாயகன் யார்?
2. அந்தரே, இலங்கைத் தீவின் எவ்வின மக்களுக்கு உவப்பான கதைநாயகனாக விளங்குகின்றான்?
3. பின்வரும் தேசங்களில் பிரசித்திவாய்ந்த கதைநாயகர்களைக் குறிப்பிடுக.
   1. தமிழ்நாடு :
   2. சீனா :
   3. ருஷியா :
4. 'அந்தரே கதைகள்' எந்த மொழியில் எழுதப்பட்டதாகும்?
5. மேற்படி படைப்பு, எவ்வெவ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகும்?
6. அந்தரே கதைகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்தவர் யார்?

### 1. இரண்டும் மூன்றும்

7. 'பிஞ்சில் பழுத்த பழம்' என்ற தொடர் அந்தரேக்கு எவ்விதம் பொருத்தப்பாடுடையதாகின்றது?
8. யாரை ஏமாற்றுவதற்கு அந்தரே முடிவு செய்தான்?
9. உணவருந்திய நிலையிலிருந்த தந்தையை நோக்கி அந்தரே வினவியது என்ன?
10. அந்தரே,தன்னிடம் மூன்று பணியாரங்கள் உள்ளன என்பதை எவ்விதம் நிரூபித்தான்?
11. "புலிக்குட்டிக்கு உள்ள திறமை பெரும்புலிக்கு இல்லாமல் போய்விடுமா?" என்ற தொடரின் மூலமாக நீர் விளங்கிக்கொள்வது என்ன?
12. அந்தரே, தந்தையின் முன் தலைகுனிந்து நிற்கக் காரணம் என்ன?
13. அந்தரேயின் குணப்பண்புகளாக நீர் கருதுவன யாவை?
14. அந்தரேயின் தந்தையினுடைய குணப்பண்புகளாக நீர் கருதுவன யாவை?
15. "மூக்கறுபடல்" – என்பதன் பொருள் யாது?
16. பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன என்பதைத் தருக.
    1. "உன் கையில் இரண்டு பணியாரங்கள் தானே இருக்கின்றன?"
    2. "பணியார எண்ணிக்கையை எண்ணட்டுமா?"
    3. "மூன்றாவது பணியாரத்தை நீ சாப்பிடு"

**17.** பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.

1. சாமர்த்தியம்
2. கேலி
3. சபாஷ்

## 2. மாட்டைப்போல்...

**18.** அந்தரேயின் குடும்பத்தினரை அயல்வீட்டார் எதற்காக அழைத்திருந்தனர்?

**19.** அந்தரேக்கு தாயினால் கூறப்பட்ட புத்திமதி என்ன?

**20.** விருந்திற்குப் பிற்பாடு விருந்தினர்கள் எல்லோரும் யாது செய்தனர்?

**21.** திருமண நிகழ்வில் அந்தரேக்கு கஷ்டமாக இருந்த காரியம் என்ன?

**22.** திருமண நிகழ்வில் அந்தரே மேற்கொண்ட குறும்புச் செயல்கள் எவை?

**23.** அந்தரே பயம்கொண்டு ஒழுங்காக நடந்துகொள்ளும்படியாக, தாய் கூறியது என்ன?

**24.** பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன என்பதைத் தருக.

1. "நல்லதம்மா, அப்படியே இருக்கிறேன்"
2. "…..பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப்போட வேண்டியதுதான்"

**25.** பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.

1. வழி
2. இன்பம்
3. புத்திமதி
4. உத்தி
5. கோபம்

## 3. சீனி ரொட்டியும் அந்தரேயும்

**26.** மேசை மீது தட்டு நிறையக் காணப்பட்ட உணவுப்பண்டம் என்ன?

**27.** அந்தரேயின் தாய் அவசர வேலையாக எங்கே சென்றிருந்தார்?

**28.** தாய், அந்தரே மீது சந்தேகங்கொள்ளக் காரணம் யாது?

**29.** தட்டிலே ரொட்டி குறைவடைந்தமைக்கான காரணமாக அந்தரே கூறியது என்ன?

**30.** பசியோடிருந்த பிள்ளையாக அந்தரே யாரைக் குறிப்பிட்டான்?

**31.** அந்தரேயின் தாயின் குணப்பண்புகளாக நீர் கருதுவன யாவை?

**32.** பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன என்பதைத் தருக.

1. "ஓ, அதையா கேட்கிறீர்கள்?"
2. "…பசியோடிருந்த அந்தப் பிள்ளை யாரடா?"

**33.** பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.

1. ஜோலி
2. வாய்ப்பு
3. தீனி
4. பரோபகாரம்
5. குஷி

## மொழிவளம்

### பார்த்தெழுதல்

தரப்படும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் மற்றும் உரைப் பகுதிகளை பிரதிசெய்தல் ‘பார்த்தெழுதல்’ எனப்படும்.

**பார்த்தெழுதலின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

- எழுத்துக்களைத் தெளிவாகவும் சீராகவும் எழுதுதல்.
- எழுத்துக்களின் திசைமுகம் பற்றி அறிந்து அதற்கமைவாக எழுதுதல்.
- எழுத்து மற்றும் சொற்களுக்கிடையில் ஏற்ற இடைவெளியை அனுசரித்து எழுதுதல்.
- பொருத்தமான இடங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுதல்.
- வரியினுடைய தொடக்கத்தில் குற்றெழுத்துக்கள் (மெய்) இடம்பெறாதவாறு எழுதுதல்.
- எழுத்துறுப்புக்களை பிரித்துவிடாது சரியான உயிர்க்குறிகளை இட்டு எழுதுதல்.

## பயிற்சி

❖ **பின்வரும் பந்தியைப் பார்த்து எழுதுக.**

மொழி அப்படிப்பட்டது அல்ல. மொழி தனிப்பட்டவரின் கலை அல்ல. எல்லோரும் சேர்ந்து ஒருமனமாய் வளர்க்கும் கலையே மொழி. இதனால் அதைச் ‘சமூகக்கலை’ என்று சொல்ல வேண்டும். நாய்க்கு நான்கு கால்கள் இருப்பதைப் பார்த்து நாற்காலி என்று நாம் பெயர்வைக்க முடியுமா? நாம் நாயை நாற்காலி என்றால் மற்றவர்கள் ஒத்துக்கொள்வார்களா? ஒருகாலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

# ஆறு

பாடம்: 2

## பயிற்சி வினாக்கள்

1. இச் செய்யுள் பகுதியை எழுதியவர் யார்? எத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
2. கவிஞர் தேசிய விநாயகம்பிள்ளையின் பெற்றோரின் பெயர்களைத் தருக.
3. தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் எப்போது பிறந்தார்? எத்தனையாவது வயதில் இறைபதமடைந்தார்?
4. தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் எங்கு வாழ்ந்தார்?
5. தேசிய விநாயகம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றைத் தருக.
6. ஆறு, தான் எங்கே குதித்து வந்ததாகக் கூறுகின்றது?
7. எல்லை விரிந்த சமவெளியின் ஊடாக ஆறானது எவ்வாறு வருகைதந்தது?
8. ஆறானது ஆசைதீர விளையாடி வந்த இடம் எது?
9. ஆறு, தான் எவற்றை வாரியும் அள்ளியும் வந்ததாகக் கூறுகின்றது?
10. ஆறு, தனது பயணத்திலே சென்று வந்த இடங்கள் நான்கு தருக.
11. இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள நீர் மூலாதாரங்கள் யாவை?
12. காயும் நிலத்தழலை ஆற்றி வந்தது எது?
13. "ஆழி இறைவனைக் காண வந்தேன்" எனும் தொடரில் 'ஆழி இறைவன்' என்பது எவ்வகை அணியாகும்?
14. "இன்னும் நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!" – என்ற தொடரின் கருத்து யாது?
15. நன்செய், புன்செய் முதலான சொற்களின் பொருள்களை முறையே தருக.
16. ஆறானது தான் எத்தனை கால்களால் நடந்து வந்ததாகக் குறிப்பிடுகின்றது?
17. நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளத்தக்க கைத்தொழிற் செயற்பாடுகளாக இச் செய்யுளில் குறிப்பிடப்படுவன யாவை?
18. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.
    1. மலை
    2. சாடிவரல்
    3. மடைச்சீப்பு
    4. தழல்
    5. பொழில்
    6. அல்
    7. ஆழி

மொழிவளம்

## நிறுத்தக்குறிகள்

ஒரு எழுத்தாக்கத்தை உருவாக்குவதற்கும், உருவாக்கிய ஆக்கங்களைக் கருத்துப் பிழையின்றி தெளிவான பொருளை விளங்கிக் கொள்வதற்கும் நிறுத்தக்குறிகள் துணை புரிகின்றன.

### 1. காற்புள்ளி / உறுப்பிசைக்குறி ( , )

- தொடராக வருகின்ற சொற்களையும், துணை வாக்கியங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படல்.

  **உதாரணம்:** *மா, பலா, வாழை என்பன முக்கனிகள் ஆகும்.*
- பொருள் மயக்கம் தோன்றும் இடங்களில் அதனை நீக்குவதற்காகப் பயன்படல்.

  **உதாரணம்:** *அண்ணன், தம்பி வீட்டிற்குச் சென்றான்.*
- வாக்கியத்தில் எழுவாய் நீண்ட தொடராக வரும்போது எழுவாயை அடுத்து பயன்படும்.

  **உதாரணம்:** *அழகும் இளமையும் அறிவும் நிறைந்த இராமன், வில்வித்தையையும் திறமையாகக் கற்றான்.*
- ஒருவரை அல்லது ஒன்றை விளித்துக் கூறுமிடத்து விளிப்பெயரை அடுத்து வருதல்.

  **உதாரணம்:** *கண்ணே, கலங்குவது ஏன்?*
- இணைப்பிடைச் சொற்களை அடுத்து வருதல்.

  **உதாரணம்:** *ஆகவே, நாம் பாதுகாப்பாக இருத்தல் அவசியமானதாகும்.*
- கடிதம் எழுதும் போது பயன்படுதல்.

  **உதாரணம்:** *உண்மையுள்ள நண்பன்,*
- திகதித் தொடரின் பகுதிகளை வேறுபிரித்துக் காட்டுவதற்கு பயன்படல்.

  **உதாரணம்:** 2021, *ஜனவரி* 01
- ஆம், இல்லை என்ற சொற்களோடு வாக்கியம் தொடங்கும் சந்தர்ப்பத்தில் பயன்படல்.

  **உதாரணம்:** *இல்லை, என்னால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.*

### 2. முக்காற்புள்ளி / விளக்கிசைக்குறி ( : )

- பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று, அதன் விளக்கமாக அமையும் சந்தர்ப்பத்தில் இக் குறியீடு பயன்படும்.

  **உதாரணம்:**

  *நூலகம் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றது: நூல்கள் யாவும் நாசமாகிவிட்டன.*

**3. முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி / முழுமாத்திரை ( . )**

- குறித்த ஒரு வாக்கியம் முற்றுப்பெற்றதன் இறுதியில் பயன்படும்.

  **உதாரணம்:** *சூரியன் கிழக்கில் உதிக்கும்.*
- ஒரு விடயத்தைச் சுருக்க முறையில் கூறும்போது பயன்படல்.

  **உதாரணம்:** *இ.போ.ச*
- கடிதத்தின் முகவரி இறுதியிலும், திகதியின் இறுதியிலும் பயன்படல்.

  **உதாரணம்:** *இல 75, கல்லூரி வீதி, மட்டக்களப்பு. 01.01.2020.*

**4. வினாக்குறி / வினாவிசைக்குறி ( ? )**

- நேர்கூற்று வினா வாக்கியங்களின் இறுதியில் பயன்படல்.

  **உதாரணம்:** *உனது பெயர் என்ன?*
- ஐயத்துக்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் அடைப்புக்குறிக்குள் வினாக்குறி இடப்படுகின்றது.

  **உதாரணம்:** *கணித ஆசிரியர் அதிபராகப் பதவியேற்பார்(?)*

**5. அடைப்புக்குறி ( )**

- சான்றாதாரம், விளக்கம், வரைவிலக்கணம், மொழிபெயர்ப்பு என்பவற்றைக் காட்டுவதற்கு இக் குறியீடு பயன்படும்.

  **உதாரணம்:**

  *ஏற்றுமதி, இறக்குமதி பற்றிக் கணக்குப்பதிவு (சென்மதி நிலுவை) எமது நாட்டுக்குச் சாதகமாக அமையும்.*

  *இணையம் (Internet)இன்று எல்லோருக்கும் கிடைக்கத்தக்க ஊடகமாக மாறியுள்ளது.*

**6. மேற்கோட்குறி ( " " )**

- பிறருடைய கூற்றை அவ்வாறே எடுத்தாளும்போது இக் குறியீடு பயன்படுத்தப்படுகின்றது.

  **உதாரணம்:** *"ஏறுபோல் நட" என்பது சான்றோர் கூற்று.*

**7. மெய்ப்பாட்டுக்குறி / வியப்புக்குறி ( ! )**

- உணர்ச்சிகளை உணர்த்தும் சொல்லை அடுத்து இக் குறியீடு பயன்படுத்தப்படும்.

  **உதாரணம்:**

  *பாவம்! வாயில்லாப் பிராணி!* **(இரக்கம்)**

  *ஆகா! அந்தப் பூஞ்சோலையின் அழகுதான் என்னே!* **(வியப்பு)**

+94 077 2400 707

## பயிற்சி

❖ **பின்வரும் பந்திக்கு, பொருத்தமான இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டு எழுதுக.**

உலகின் நுரையீரல் எனப்படும் அமேசன் காடு அண்மைக் காலத்தில் பல தினங்களாகத் தொடர்ந்து எரிந்தது அதனால் மரங்கள் ஏராளமாக அழிந்தன வன விலங்குகள் மடிந்தன சுற்றுச்சூழல் மாசடைந்தது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இப் பாதிப்புகள் வன வளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு வன்மையாக உணர்த்தியுள்ளன அவ்வகையில் வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பாதுகாக்கப்படாவிட்டால் ஏற்படும் தீமைகள் முதலானவற்றை நாம் நன்கு அறிந்திருத்தல் இன்றியமையாததாகும்

❖ **பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டு எழுதுக.**

1. இனி உரையாடலைத் தொடங்குவோம்
2. சீ நீ வெளியேறு
3. வீட்டுத் தளபாடங்கள் கதிரை மேசை கட்டில் ஏலத்தில் விற்கப்படுகின்றன
4. தமிழ் ஒரு செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது
5. புதுமைப்பித்தனை நீக்கிவிட்டு தமிழ்ச் சிறுகதை வரலாற்றைப் பார்க்க முடியாது என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார்

# கடமை

பாடம்: 3

## பயிற்சி வினாக்கள்

**1.** இக் கட்டுரையை எழுதியவர் யார்? இது எந்நூலில் இடம்பெற்றுள்ளது?

**2.** இக் கட்டுரையின் பிரதான கருத்தைத் தெளிவுபடுத்துக.

**3.** 'கடமை' என்பதற்குக் கட்டுரையாசிரியர் உரைக்கும் வரைவிலக்கணம் என்ன?

**4.** நாம் எல்லோரதும் முதலாவது கடமை எதுவெனக் கட்டுரையின் மூலம் கூறப்பட்டுள்ளது?

**5.** நாம் யார் யாருக்குக் கடமைப்பட்டுள்ளோம்?

**6.** நாம் முழு உரிமையாகப் பெற்றுக்கொண்ட செல்வங்கள் யாவை?

**7.** மனிதன் எதன் மூலமாகச் சுகம் பெறுகின்றான்?

**8.** ஒருவர் சுயநலவாதியாகச் செயற்படக்கூடிய எல்லை எதுவெனக் கட்டுரையின் ஆசிரியர் வரையறுத்துக் காட்டுகின்றார்?

**9.** மனிதனுக்குள்ள தலையாய கடமை எது?

**10.** இக் கட்டுரையில் கையாளப்பட்டுள்ள பழமொழியைக் குறிப்பிடுக.

**11.** நான்கு வகையான பயன்களும் யாவை?

**12.** இப் பாடப்பரப்பில் இடம்பெற்றுள்ள விழுமியக் கருத்துக்களைத் தொகுத்துரைக்குக.

**13.** பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.

1. கடவுள்
2. தர்மம்
3. சுலபம்
4. விவகாரம்
5. சூரர்
6. குந்தகம்
7. ஆட்சேபனை
8. நிபந்தனை

## மொழிவளம்

### ஒலி வேறுபாடுகள்

- 'ல'கர, 'ள'கர, 'ழ'கர வேறுபாடுகள்
- 'ண'கர, 'ன'கர, 'ந'கர வேறுபாடுகள்
- 'ர'கர, 'ற'கர வேறுபாடுகள்

## பயிற்சி

❖ **அகராதியின் துணையுடன் பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தேடியறிக.**

| | | | |
|---|---|---|---|
| 1 | கணி | 11 | தோண்டி |
| 2 | தோன்றி | 12 | வண்மை |
| 3 | வன்மை | 13 | கூலம் |
| 4 | கூளம் | 14 | கூழம் |
| 5 | வாலை | 15 | வாளை |
| 6 | வாழை | 16 | கோலம் |
| 7 | கோளம் | 17 | குழி |
| 8 | குளி | 18 | நாழி |
| 9 | நாளி | 19 | சூரை |
| 10 | சூறை | 20 | தெறு |

### சொல்வதெழுதல்

ஒருவர் கூறும் விடயத்தைக் கேட்டுக் கிரகித்து எழுதப்படுவதே 'சொல்வதெழுதல்' எனப்படும்.

**சொல்வதெழுதலின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

- கேட்டவற்றை மனதில் பதித்துக்கொள்ளல் வேண்டும்.
- செவிப்புலன், விழிப்புலன், கையசைவு என்பவற்றை இசைவுபடுத்தி விரைவாக எழுதுதல் வேண்டும்.
- பொருத்தமான இடங்களில் உரிய நிறுத்தக்குறிகளைப் பிரயோகித்தல் வேண்டும்.
- எழுத்துக்களின் உச்சரிப்பு வேறுபாடுகளைச் சரியாகக் கிரகித்துக்கொண்டு, அவற்றை அனுசரித்து எழுதுதல் வேண்டும்.

+94 077 2400 707

## பயிற்சி

❖ **பின்வரும் பந்தி வாசிக்கப்படும்போது அதனைச் சரியாகக் கேட்டுக் கிரகித்து உறுப்பமைய எழுதுக.**

வ.வே.சு ஐயர் என்று சுருக்கமாகவும் மதிப்போடும் அழைக்கப் பெறும் வரகநேரி வேங்கட சுப்பிரமணிய ஐயரே தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் என்று போற்றப்படுகின்றார். கலை, வீரம், விடுதலை என்ற மூன்றையே தம்முடைய உயிர் மூச்சாக கொண்டிருந்த ஐயரின் வாழ்க்கை கடைசி வரையிலும் அவற்றுக்கான தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தது. ஐயர் தன் வாழ்க்கையில் மேற்கொண்ட ஒரு காசி யாத்திரையின் போது செய்து கொண்ட இரு உறுதி மொழிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. அவர் மேற்கொண்ட உறுதி மொழிகளில் முதலாவது தமிழ்க்கலை வளர்ச்சி, இரண்டாவது குருகுலம் நிறுவுதல் ஆகும்.

## இலக்கணம்

### வாக்கியம் அமைத்தல்

வாக்கிய உறுப்புகளை முறையாக இணைத்து பொருள் தரும் வகையில் வாக்கியங்களாக உருவாக்குதலே ‘வாக்கியம் அமைத்தல்’ எனப்படும்.

வாக்கியம் ஒன்றின் அடிப்படை உறுப்புகளாக பின்வருவன விளங்குகின்றன.

❖ **எழுவாய்**

வாக்கியம் ஒன்றிலே கருத்து உருவாகும் இடம் அல்லது பேசுபவன் கருத்தை எடுக்கின்ற இடம் ‘எழுவாய்’ எனப்படும்.

❖ **பயனிலை**

வாக்கியம் ஒன்றிலே கருத்து முற்றுப்பெறும் இடம் ‘பயனிலை’ எனப்படும்.

❖ **செயப்படுபொருள்**

வாக்கியம் ஒன்றிலே இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்கும் பெயர்ச்சொல் ‘செயப்படுபொருள்’ எனப்படும். இது வினையொன்றின் பயனைக் கூறுவதாக அமையும்.

**உதாரணம்:** *தம்பி பந்து விளையாடினான்.*

| | |
|---|---|
| *எழுவாய்* | *: தம்பி* |
| *பயனிலை* | *: விளையாடினான்* |
| *செயப்படுபொருள்* | *: பந்து* |

இவற்றுக்கு மேலதிகமாக வாக்கியம் ஒன்றானது அடைமொழிகளை உள்வாங்கியும் எழுதப்படுகின்றது. அத்தகைய அடைமொழிகள் பின்வருமாறு:

- **எழுவாய் அடைமொழி**
- **பயனிலை அடைமொழி**
- **செயப்படுபொருள் அடைமொழி**

**உதாரணம்:** *சின்னத் தம்பி பெரிய பந்தை வேகமாக உருட்டினான்.*

| | |
|---|---|
| *எழுவாய்* | *: தம்பி* |
| *எழுவாய் அடைமொழி* | *: சின்ன* |
| *பயனிலை* | *: உருட்டினான்* |
| *பயனிலை அடைமொழி* | *: வேகமாக* |
| *செயப்படுபொருள்* | *: பந்து* |
| *செயப்படுபொருள் அடைமொழி* | *: பெரிய* |

அத்துடன், வாக்கியங்களை அமைக்குமபோது எழுவாய் மற்றும் பயனிலை என்பவற்றுக்கிடையில் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றின் இயைபு கவனிக்கப்படல் வேண்டும். இதனையே 'வாக்கிய இயைபு' என அழைப்பர்.

**உதாரணம்:** *நாய்கள்* பலமாகக் *குரைத்தன*.

*அக்கா* பாட்டுப் *பாடினாள்*.

வாக்கிய இயைபைப் பேணாது அமைக்கப்படும் வாக்கியங்கள் வழுவுடைய வாக்கியங்களாகக் கொள்ளப்படும்.

**உதாரணம்:** *தம்பி* வேகமாக *வந்தாள்*.

*பறவைகள்* வானில் *பறந்தது*.

## பயிற்சி

❖ **பின்வரும் வாக்கியங்களிலுள்ள வாக்கிய உறுப்புகளைச் சரியாக இனங்கண்டு எழுதுக.**

1. நல்ல மனிதன் நாட்டின் உரிமைக்காக அயராது உழைத்தான்.
2. எனது அம்மா சுவையான உணவுகளை விரைவாகச் சமைப்பார்.
3. அழகான முயல் குட்டி காட்டில் குட்டியுடன் ஓடியது.
4. அழகிய நடனத்தை நிகழ்த்திய மாணவியை சபையோர் வெகுவாகப் பாராட்டினர்.
5. சின்னக் குழந்தை தனது பிஞ்சுக் கரங்களால் என்னைப் பற்றியது.

# அடைமொழி

பெயர் அல்லது வினைச் சொற்களின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் 'அடைமொழி' எனப்படும்.

அமைப்பின் அடிப்படையில் அடைமொழியைப் பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தி நோக்கலாம்.

- **பெயரடை**
  பெயர்ச் சொல் ஒன்றின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் 'பெயரடை' எனப்படும்.
  **உதாரணம்:** *அழகிய சேலை*
  *பெரிய நூலகம்*

- **வினையடை**
  வினைச் சொல் ஒன்றின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் 'வினையடை' எனப்படும்.
  **உதாரணம்:** *இனிமையாகப் பாடினாள்.*
  *வேகமாக ஓடினான்.*

## பயிற்சி

- **பின்வரும் வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு, அவை பெயரடைமொழிகளா அல்லது வினையடைமொழிகளா என்பதை எழுதுக.**
  1. செந்நிறப் பூக்கள் மணம் வீசின.
  2. வேகமாக வந்த கார் அவனை முட்டி மோதியது.
  3. நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்.
  4. காற்று பலமாக வீசியது.
  5. குளிர்மையான நிலவு வானில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

# காட்டு விலங்குகளைக் காப்போம்

பாடம்: 4

## பயிற்சி வினாக்கள்

1. தொல்காப்பியர், நிலத்தை எவ்வாறு பாகுபாடு செய்துள்ளார்?
2. எவ்விரு நிலங்கள் திரிபடைந்ததன் விளைவாகப் பாலை நிலம் உருவானது?
3. காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
4. காட்டிலே அவதானிக்கக்கூடிய மூன்று காட்சிகளைக் குறிப்பிடுக.
5. காட்டிலே உள்ள சிறு பாதைகளின் இயல்பு, எதற்கு உவமிக்கப்படுகின்றது?
6. காட்டில் வாழும் கொடிய விலங்குகள் எவையேனும் நான்கு தருக.
7. காட்டின் பயன்கள் ஐந்து தருக.
8. யானைக் கூட்டங்களை இயற்கையாகவே அவதானிக்கவல்ல நாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
9. தனக்குத் தீங்கிழைத்தவரைத் தப்பாமல் தண்டிக்கும் விலங்கு எது?
10. யானையின் சிறப்பினை மெய்ப்பிக்கும் வகையில் கூறப்படும் பழமொழி என்ன?
11. பின்வரும் விலங்குகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் பலராலும் எடுத்தாளப்படும் உவமைகளைக் குறிப்பிடுக.
    1. நாய்
    2. சிங்கம்
    3. புலி
    4. பசு
    5. நரி
12. திருக்குறளில், காட்டு விலங்குகள் தொடர்பாக வள்ளுவரால் கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.
13. காடு மற்றும் காட்டு விலங்குகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள் நான்கு தருக.
14. காடு மற்றும் காட்டு விலங்குகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் நான்கு தருக.
15. காட்டினையும், காட்டு விலங்குகளையும் அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் நான்கு தருக.
16. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.
    1. கோந்து
    2. களிப்பு
    3. அற்பர்

## மொழிவளம்

# பந்தி அமைத்தல்

எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவுபடுத்துவதற்கு, கருத்துள்ள பந்தியாக வகுத்து விபரிப்பது சிறப்பானதாகும். அந்த வகையில் ஒவ்வொரு பந்தியும் திடமான ஒரு கருத்தை மையமாகக் கொண்டிருத்தல் அவசியமானதாகும்.

**பந்தி ஒன்றின் பண்புகள்**:

- தலைமைக் கருத்தொன்றைக் கொண்டிருத்தல்.
- தலைமைக் கருத்தை ஐயந்திரிபற உறுதியாக முன்வைத்தல்.
- பொருத்தமான துணைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்.
- வாசகரின் மனதில் எழத்தக்க வினாக்களுக்கு விடைதரக் கூடிய வகையில் காணப்படுதல்.

**பந்தி ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள்**:

- கூறியது கூறல்.
- மிகைப்படக் கூறல்.
- முன்னுக்குப்பின் முரணாகக் கூறல்.
- தேவைக்கேற்ற அளவு ஒரு பொருள் பற்றிக் கூறாது விடுதல்.
- சொல்ல வந்த பொருளை விடுத்து, வேறொரு பொருள் பற்றிக் கூறுதல்.

**பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிகள்**:

- விவரங்கள் தந்து விரித்தல்.
- ஒற்றுமை வேற்றுமை காட்டி விரித்தல்.
- உதாரணம் காட்டி விரித்தல்.
- நியாயங்கூறி விரித்தல்.
- விளக்கம்கூறி விரித்தல்.

## பயிற்சி

❖ **பின்வரும் வாக்கியங்களை ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தி, ஒரு கருத்துள்ள பந்தியாக எழுதுக.**

**1.** புதர்களிலோ, மரத்தின் கிளைகளிலோ மாத்திரம் அமர்ந்து அது பாடுவதில்லை.
**2.** வானில் மிக உயரத்திற்கு சிறு புள்ளியாகக்கூடத் தெரியாத அவ்வளவு உயரத்திற்குச் சென்று அங்கு பறந்தபடி பாடும்.
**3.** வானம்பாடி ஒரு பறவை; இனிமையாகப் பாடக்கூடியது.
**4.** அவ்வினிய ஓசையைக் கேட்டு மக்கள் பரவசமடைவார்கள்.
**5.** அப்பொழுது அந்தப் பாடல் மென்மைமிக்க இனிய இசையாகும். எங்கும் கேட்கும்.

**இலக்கணம்**

# எழுத்துக்களின் வகை தொகையும் அவற்றின் ஒலிப்பு முறையும்

தமிழ் இலக்கண நூல்களில் 'எழுத்து' எனும் சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும், அவ் ஒலிகளுக்குரிய வரி வடிவத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ் எழுத்துக்களைப் பிரதானமாகப் பின்வருமாறு பாகுபடுத்துவர்.

- **முதலெழுத்துக்கள்**
- **சார்பெழுத்துக்கள்**

## முதலெழுத்துக்கள்

தமிழ் மொழியில் வழங்கும் அடிப்படையான ஒலிகளையும், அவற்றின் வரி வடிவங்களையுமே 'முதலெழுத்துக்கள்' என்பர். உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் என்பன முதலெழுத்துக்களாகக் கொள்ளப்படும்.

உயிர் எழுத்துக்கள் **பன்னிரெண்டும் (12)**, மெய்யெழுத்துக்கள் **பதினெட்டும் (18)** இணைந்துவரும் மொத்தம் **முப்பது (30)** எழுத்துக்களும் 'முதலெழுத்துக்கள்' எனப்படும்.

### உயிர் எழுத்துக்கள்:

'அ'கரம் முதல் 'ஔ'காரம் வரையான **பன்னிரெண்டு (12)** எழுத்துக்களும், உயிர் போலத் தனித்து இயங்கவல்லனவாக உள்ளமையால் இவற்றை 'உயிர் எழுத்துக்கள்' என்கின்றோம்.

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ**

உயிர் எழுத்துக்களை அவை உச்சரிக்கும் கால அளவை அடிப்படையாகக் கொண்டு அவற்றை உயிர்க்குறில் / தனிக்குறில் எழுத்துக்கள், உயிர்நெடில் / தனி நெடில் எழுத்துக்கள் என வகைப்படுத்துவர்.

### *உயிர்க்குறில் / தனிக்குறில் எழுத்துக்கள்:*

குறுகிய ஓசை கொண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் 'குறில் எழுத்துக்கள்' எனப்படும். அந்த வகையில், உயிர் எழுத்துக்களில் வரும் குறில் எழுத்துக்கள் 'உயிர்க்குறில் எழுத்துக்கள்' எனப்படுகின்றன. இவை **ஒரு** மாத்திரை அளவில் ஒலிக்கின்றன. பின்வரும் **ஐந்து (05)** எழுத்துக்களும் உயிர்க்குறில் எழுத்துக்களாகும்.

**அ, இ, உ, எ, ஒ**

**உயிர்நெடில் / தனிநெடில் எழுத்துக்கள்:**
நீண்ட ஓசை கொண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் ‘நெடில் எழுத்துக்கள்’ எனப்படும். உயிர் எழுத்துக்களில் வரும் நெடில் எழுத்துக்கள் ‘உயிர்நெடில் எழுத்துக்கள்’ எனப்படுகின்றன.

இவை **இரண்டு** மாத்திரை அளவில் ஒலிக்கின்றன. பின்வரும் **ஏழு (07)** எழுத்துக்களும் உயிர்நெடில் எழுத்துக்களாகும்.

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ**

**மெய் எழுத்துக்கள்:**
‘க’கரம் (க்) முதல் ‘ன’கரம் (ன்) வரையிலான **பதினெட்டு (18)** எழுத்துக்களும் உயிரின்றி இயங்கா உடல் போலவே தாமாக இயங்கும் தன்மை அற்றவை ஆகையினால், அவை ‘மெய்யெழுத்துக்கள்’ எனப்பட்டன. இவை உடல், உடம்பு, ஒற்று எழுத்து எனவும் பெயர்பெறும்.

மெய்யெழுத்துக்களை அவற்றின் உச்சரிப்பு முறையையொட்டி மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துவர்.

- *வல்லினம் (வலிய ஒலிப்புடையவை)*
  **க், ச், ட், த், ப், ற்**
- *மெல்லினம் (மெல்லிய ஒலிப்புடையவை)*
  **ங், ஞ், ண், ந், ம், ன்**
- *இடையினம் (இடைப்பட்ட ஒலிப்புடையவை)*
  **ய், ர், ல், வ், ழ், ள்**

## கிரந்த எழுத்துக்கள்

வடமொழிச் சொற்களை எழுதுவதற்குப் பயன்படும் எழுத்து வடிவமே ‘கிரந்த எழுத்துக்கள்’ ஆகும். இவை வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்த எழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன. பின்வரும் எழுத்துக்கள் தற்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வடமொழி எழுத்துக்களாக அமைகின்றன.

**ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ**

**எடுத்துக்காட்டு:**

**ஜ** - *ஜலம், பங்கஜம், ஜீவராசிகள்*
**ஸ** - *ஸர்ப்பம், ஸ்டேஷன்*
**ஷ** - *புஷ்பம், விஷ்ணு, ஷசிலா*
**ஸ்ரீ** - *ஸ்ரீலங்கா*
**ஹ** - *ஹர்த்தால்*

+94 077 2400 707

# எழுத்துக்களின் தொகை

| இல | எழுத்து வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உயிர் எழுத்துக்கள் | 12 |
| 2 | மெய் எழுத்துக்கள் | 18 |
| 3 | முதல் எழுத்துக்கள் | 30 |
| 4 | ஆய்த எழுத்து | 01 |
| 5 | உயிர்மெய்க் குறில் எழுத்துக்கள் | 18 X 5 = 90 |
| 6 | உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் | 18 X 7 = 126 |
| 7 | வல்லின மெய்யெழுத்துக்கள் | 06 |
| 8 | மெல்லின மெய்யெழுத்துக்கள் | 06 |
| 9 | இடையின மெய்யெழுத்துக்கள் | 06 |
| 10 | உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |
| 11 | தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்த எழுத்துக்கள் | 247 |
| 12 | வல்லின உயிர்மெய் எழுத்துக்கள் | 06 X 12 = 72 |
| 13 | மெல்லின உயிர்மெய் எழுத்துக்கள் | 06 X 12 = 72 |
| 14 | இடையின உயிர்மெய் எழுத்துக்கள் | 06 X 12 = 72 |
| 15 | தனிக்குறில் எழுத்துக்கள் | 05 |
| 16 | தனிநெடில் எழுத்துக்கள் | 07 |
| 17 | தமிழிலுள்ள மொத்த நெடில் எழுத்துக்கள் | 126+7=133 |
| 18 | தமிழிலுள்ள மொத்தக் குறில் எழுத்துக்கள் | 90 + 05 = 95 |

# யாம் ஐவேம்

## பாடம்: 5

### பயிற்சி வினாக்கள்

1. இச் செய்யுட் பகுதியை எழுதியவர் யார்?
2. இச் செய்யுட் பகுதியானது யாரைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது?
3. கவிஞர் அழகசுந்தர தேசிகர் இயற்றிய நூல்கள் யாவை?
4. இச் செய்யுளில் குறிப்பிடப்படும் சிறுமியின் பெயர் என்ன? அவளின் வயது யாது?
5. கவிஞர், சிறுமியைச் சந்தித்த இடம் எது?
6. சிறுமியின் அழகுக் கோலம் இச் செய்யுளின் மூலம் எவ்வாறு புனைந்துரைக்கப்படுகின்றது?
7. பெரியவரை நோக்கி, "என்பேர்தான் அஞ்சுசதம் பெறுமோ?" எனச் சிறுமி வினவியமைக்கான காரணம் யாது?
8. "யாம் ஐவேம்" என்ற தொடரால் குறிப்பிடப்படும் ஐவரின் பெயர்களையும் தருக.
9. இச் செய்யுளின் மூலமாகச் சிறுமியின் அதீத ஆற்றல் வெளிப்படுமாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
10. யாழ்ப்பாணத்தை விட்டு எத்தனைபேர் சென்றதாகச் சிறுமி உரைக்கின்றாள்?
11. சுந்தரியின் அக்கா எந்த நாட்டில் வசிக்கின்றார்?
12. பின்வரும் சொற்களின் திருத்தமான வடிவங்களைத் தருக.
    1. அஞ்சுசதம்
    2. தின்னா
    3. பேர்
13. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.
    1. காண்டீபம்
    2. கோதண்டம்
    3. கட்டழகி
    4. அமுதம்
    5. கணை
    6. பாங்கி
    7. நண்ணுதல்
    8. புங்கவர்
    9. குழல்

## மொழிவளம்

# ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்க் கருத்துச் சொற்களும்

## பயிற்சி

❖ **பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.**

1. காடு
2. வான்
3. ஆசாரம்
4. கண்ணி
5. நன்கொடை
6. நசை
7. பழமை
8. சிரமம்
9. யாத்திரை
10. அவனி

❖ **பின்வரும் சொற்களுக்கான எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக.**

1. அகங்கை
2. இயற்கை
3. ஆண்டான்
4. உண்மை
5. பாலர்
6. ஒற்றுமை
7. பண்டிதர்
8. அண்மை
9. ஈதல்
10. இரகசியம்

# காந்தியடிகள் கடிதம்

## பாடம்: 6

### பயிற்சி வினாக்கள்

**1.** காந்தியடிகள் எங்கே, எப்போது பிறந்தார்?

**2.** காந்தியின் இயற்பெயர் என்ன?

**3.** அறவழிப் போராட்டத்தின் மூலம் இந்தியாவின் விடுதலைக்கு வழிவகுத்தவர் யார்?

**4.** இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்ட பட்டம் என்ன?

**5.** 'சத்திய சோதனை' என்ற நூலின் ஆசிரியர் யார்?

**6.** காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலை எது?

**7.** இக் கடிதம் மூலமாக தனது சிறை அனுபவத்தைக் காந்தியடிகள் யாருடன் பகிர்ந்து கொள்கின்றார்?

**8.** சிறைச்சாலையில் காந்தியடிகளுக்குச் செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் எவை?

**9.** காந்தியடிகளுக்குத் தலையணை கிடைப்பதற்கு வழியேற்படுத்தியவர் யார்?

**10.** எந்த விடயம் தொடர்பான தமது நம்பிக்கை குறித்து காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்?

**11.** தனது சிறைவாழ்வின் அனுபவங்கள் பற்றி காந்தியடிகள் குறிப்பிடுவனவற்றைச் சுருக்கமாகத் தருக.

**12.** இக் கடிதத்தின் வகையைக் குறிப்பிட்டு, இங்கு கையாளப்பட்டுள்ள கடித உறுப்புகளையும் தருக.

**13.** பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.

1. விழைகிறேன்
2. வரப்பிரசாதம்
3. பிரார்த்தனை
4. அனுகூலம்
5. ஆகாரம்
6. துப்பட்டி
7. சாவி
8. சௌகரியம்
9. நிருமலம்
10. இராட்டை

## மொழிவளம்

# கடிதம்

எமது தேவை, நிலைமை, எண்ணம், விருப்பு, வெறுப்பு முதலான பல்வேறு விடயங்களையும் பிறரோடு பரிமாறிக்கொள்வதற்குப் பயன்படுகின்ற ஒரு ஊடகமே கடிதமாகும். கடிதத்தைப் பிரதானமாக பின்வருமாறு பாகுபடுத்தி நோக்கலாம்.

## உறவுமுறைக் கடிதம்

சுற்றத்தார், நண்பர்கள், தமக்குள் எழுதிக்கொள்வதை 'உறவுமுறைக் கடிதங்கள்' என்பர். இது பலவகைப்படுகின்றது.

- **நட்புமுறைக் கடிதம்**
- **நன்றியறிவிப்புக் கடிதம்**
- **அனுதாபக் கடிதம்**
- **அழைப்புக் கடிதம்**
- **வாழ்த்துக் கடிதம்**

### ❑ உறவுமுறைக் கடிதமொன்றின் உறுப்புக்கள்

உறவுமுறைக் கடிதம் ஒன்றானது பின்வருமாறு ஐந்து உறுப்புகளைக் கொண்டமைந்திருக்கும்.

**✸ முகவரியும் திகதியும்**

இது, கடித்ததை எழுதுபவருடைய முழுமையான முகவரியையும், கடிதம் எழுதப்படும் திகதியையும் குறிக்கின்றது.

**எடுத்துக்காட்டு:**

சி. பரமசாமி
இல. 100 D,
2ஆம் குறுக்கு வீதி,
திருநாவற்குளம்,
வவுனியா.
2021.01.01

**✸ விளிப்பு**

உறவுமுறைக் கடிதமொன்றின் விளித்தலானது பலவாறாக அமையலாம். அதாவது, அன்பின் நெருக்கத்தைப் பொறுத்து இது வேறுபட்டு அமையும்.

**எடுத்துக்காட்டு:**

அருமை நண்பா,
ஆருயிர்த் தோழி,

**✸ செய்தி / உடல் / உள்ளடக்கம்**

கடிதத்தின் முக்கிய உறுப்பு இதுவேயாகும். தரப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமுற செய்தி எழுதப்படுதல் வேண்டும். விடயங்கள் மாறுபடுவதைக் காட்டவே பந்திப் பகுப்பு காட்டப்படும். ஆகவே, பந்தியமைப்பைக் கவனித்து எழுதுவதுடன், ஒவ்வொரு புதிய பந்தியினையும் ஓரத்திலிருந்த ஒரேயளவான தூரம் உள்ளே தள்ளி ஆரம்பித்தல் வேண்டும்.

- **முடிப்பு**

  உறவுமுறைக் கடிதத்தில் உறவுமுறை பற்றிக் கூறிமுடிப்பதாக முடிப்பு அமைவுபெறும். முடிப்பின் இறுதியில் காற்பள்ளி இடப்படுகின்றது.

  **எடுத்துக்காட்டு:**

  உன் அன்பு நண்பன்,
  அருமைத் தோழி


- **ஒப்பம்**

  நன்கு அறியாத ஒருவருக்கு எழுதப்படும் கடிதத்தில் ஒப்பம் இடப்படுதல் அவசியமானதாகும். (உதாரணம்: பேனா நண்பர்கள்) கையொப்பத்தை நியம மொழியில் இட்டுக்கொள்ள முடியும்.

  **எடுத்துக்காட்டு:**

  சி. அனுஷா

## தொழில்முறைக் கடிதமொன்றின் மாதிரி அமைப்பு




**முறை I** **முறை II**

### குறிப்பு:

- பாரம்பரிய முறையில் **முறை I** இல் காட்டப்பட்டது போன்றே தொழில்முறைக் கடித அமைப்புக் காணப்பட்டது.
- தற்காலத்தில் பெரிதும் கணனி முறையில் கடிதங்கள் வடிவமைக்கப்படுவதால், **முறை II** இல் காட்டப்பட்டது போன்றே கடித அமைப்புப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

❖ **கடிதம் ஒன்றின் பயன்பாடுகள்:**

1. உறவுநிலைகள் வலுப்படுதல்.
2. கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுதல்
3. ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளல்.
4. தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.

# தமிழ்த் தட்டச்சின் தந்தை

## பாடம்: 7

### பயிற்சி வினாக்கள்

1. இக் கட்டுரையை எழுதியவர் யார்? இது எந்த இதழில் இடம்பெற்றுள்ளது?
2. இக் கட்டுரையின் மூலம் எடுத்துரைக்கப்படும் பிரதான விடயம் என்ன?
3. 'ரைப்ரைட்டர்' என்பதன் தமிழ் வடிவம் யாது?
4. 1875 காலப்பகுதியில் வியாபாரத்திற்கு கொண்டுவரப்பட்ட தட்டச்சுப் பொறியின் பெயர் என்ன?
5. அக்காலத்தில், ஆங்கில எழுத்தாளர்களுக்கு இன்றியமையாத ஒரு சாதனமாக மாறியிருந்தது எது?
6. 'முத்தையா' அவர்கள் எங்கே, எப்போது பிறந்தார்?
7. அறுமுகநாவலரின் சீடர்களில் ஒருவராக இருந்தவர் யார்?
8. முத்தையா அவர்களுக்கு ரெயில்வே இலாகாவில் பணிபுரியும் வாய்ப்பு யாரால் கிட்டியது?
9. முத்தையா, வர்த்தக ஸ்தாபனத்தில் பணிபுரிந்த நாட்களில் கற்றவைகள் எவை?
10. 'தமிழ்த் தட்டச்சின் தந்தை' எனப் போற்றப்படுபவர் யார்?
11. முத்தையாவினால் கண்டறியப்பட்ட தட்டச்சுப்பொறியை ஆரம்பத்தில் எவ்வாறு அழைத்தார்கள்?
12. முத்தையாவினால் கண்டறியப்பட்ட எவ் விடயத்தை, தட்டச்சு உற்பத்தியாளர்கள் இன்றுவரை பின்பற்றுகின்றார்கள்?
13. அரசினரின் விசைப் பலகையின் கீழ் இடத்தில் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் எவை?
14. முத்தையா உருவாக்கிய தட்டச்சினைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட தட்டச்சுகள் எவை?
15. முத்தையா அவர்களின் சிறந்த குணவியல்புகளாக நீர் கருதுவன யாவை?
16. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களைத் தருக.
    1. இலாகா
    2. குமாஸ்தா
    3. யந்திரம்
    4. ஸ்தாபனம்
    5. மோகம்